DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.368/17

Deposition of Witness: PW 1

| | |
|---|---|
| Name செல்வராணி | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.10.2019

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் பிசிபட்டியில் குடியிருந்து வருகிறேன். எனக்கு சொந்த ஊர் ஆணைமலையான்பட்டி. என் மருமகன் முருகதாஸ் சாலை விபத்தில் இறந்துவிட்டதால் என் மகளுடன் பிசிபட்டியில் குடியிருக்கிறேன். கடந்த 11.7.17ம் தேதி காலை சுமார் 6மணிக்கு நான் வாசலை தொளித்துகோலம் போட்டுக்கொண்டிருந்தேன். அப்போது என் கணவர் நடைபயிற்ச்சிக்கு சென்றுவிட்டார். அப்போது தெற்கில் இருந்து வடக்குநோக்கி ஒருவர் இருசக்கரவாகனத்தில் சென்றார் நான் குனிந்து கோலம்போட்டுக்கொண்டிருந்தேன். இருசக்கரவாகனத்தில் சென்றவர் மீண்டும திரும்பி வந்து எனக்கு பின்னமாக இருந்து என் கழுத்தில் அணிந்திருந்த தாலி செயினை அறுத்துக்கொண்டு சென்றுவிட்டார். என் கணவர் வந்தவுடன் காவல்நலையம் சென்று புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் மனு அசாஆ.1. புகைப்படத்தில் உள்ள தாலி செயின் என்னுடையது தான். புகைப்படத்தில் உள்ள தாலிசெயின் சாபொ1. சம்பவம் தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

நான் முதல்விசாரணையில் சொன்ன தேதியில் தான் சம்பவம் நடந்தது என்றால் சரிதான். புகாரில் இருசக்கரவாகனத்தின் பதிவு எண்ணை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். செயினை பறித்து சென்ற நபரின் உருவமைப்பு உயரம் பற்றி நான் புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என் வீட்டின் அருகில் குடியிருந்தவர்களும் சம்பவத்தை நேரில் பார்த்தார்கள். அவர்கள் எதிரியை விரட்டி சென்று பிடிக்க முயற்சி செய்யவில்லை. எங்கள் குடியிருப்பில் சிசிடி கேமரா பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் போலிசார் கேட்டதற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.